தமிழ் (Tamil)

மேற்கு அவுஸ்திரேலிய 'சிறுவர் பாதுகாப்பு மற்றும் குடும்ப ஆதரவு சேவை திணைக்கள' (Department for Child Protection and Family Support) இணையதளத்திற்கு உங்களை வரவேற்கிறோம்.

இத்திணைக்களம் பல்வேறு சமூகத்துறை நிறுவனங்களுடனும் மற்றைய அரச நிறுவனங்களுடனும் இணைந்து அநேக சேவைகளை மேற்கு அவுஸ்திரேலிய தனி நபர்களுக்கும், சிறார்களுக்கும், சிறார்களின் குடும்பத்தினர்க்கும் வழங்கி வருகிறது.

இத் திணைக்களம் வழங்கும் சேவைகளாவன:

- திணைக்கள தலைமை செயல் அதிகாரியின் பாதுகாப்பில் (கண்காணிப்பில்) இருக்கும் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் இளம்பருவத்தினருக்கு நலம் பேணல் உதவிகளை வழங்குதல்;
- துஷ்பிரயோகம், முறைசாரான நடத்தைகள் அல்லது புறக்கணிப்பினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், சிறுவர்களையும் அச் சூழ்நிலையில் இருந்து பாதுகாத்தல்;
- ஆபத்து அல்லது சிக்கலான நிலவரத்தில் உள்ள குடும்பங்களும் தனிநபர்களும் பாதுகாப்பாக இருக்கவும், அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்தவும் ஆதரவு வழங்குதல்.

இத்திணைக்கள *வழக்கு நடைமுறை கையேடு (Case Practice Manual)* மற்றும் பல்வேறு திணைக்களங்களின் கட்டமைப்பு, கொள்கை, செயல்பாட்டு குறிப்பேடுகள் ஆகியவற்றை இந்த இணையதளத்தில் பொது மக்களால் அணுக முடியும்.

இந்த இணையதளத்திலுள்ள தகவல்களைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தால் அல்லது அவற்றை மொழிபெயர்த்துச் சொல்ல யாரையாவது அணுக வேண்டுமானால், உங்கள் அருகில் உள்ள திணைக்கள கிளை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். எம்மால் ஒரு தொலைபேசி மொழிபெயர்ப்பாளரை உங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க இயலும்.

திணைக்களத்தின் கிளை அலுவலக பட்டியலுக்கு (1) என்ற இடத்தில் சொடுக்கவும்.
மொழிபெயர்ப்பாளர் சேவைகளை அணுகுவதற்கான மேலதிக விபரங்களுக்கு (2) என்ற இடத்தில் சொடுக்கவும்.